தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் தொடர்பான பொழிப்பு அறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கம்பஹா மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீண்டெழும் செலவினம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2024 செப்தம்பர் 10 ஆம் திகதி முதல் 2024 நவம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய தூய்மைப்படுத்தல் செலவுகளாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 141,055 தொகையினை ஈடுசெய்வதற்காக, 2024 திசெம்பர் மாத தூய்மைப்படுத்தல் பட்டியலின் பெறுமதியான ரூபா 118,181 ஐ சம்பந்தப்பட்ட செலவினக் கணக்கிற்குப் மிகை அறவீடு செய்வதற்குப் பதிலாக, பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது.	ஒப்பந்தத்தில் நிலவும் சிக்கல்கள் காரணமாக சம்பந்தப்பட்ட தொகை நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன், சிக்கல் தீர்க்கப்பட்டதன் பின்னர் அத்தொகை தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.	மேலதிகச் செலுத்துகை மற்றும் அதனை ஈடுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பிடிகாசு என்பன மீளாய்வாண்டில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் ஆதலால், நிறுத்தி வைக்கப்பட்ட தொகை செலவினக் கணக்கிற்குப் மிகை அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ii)	பியகம பிரதேச செயலகத்தினால் பயன்படுத்தப்படும் இரண்டு கெப் வண்டிகளுக்குப் புதிதாக 8 டயர்கள் இடுதலுக்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா 334,711 தொகையானது வாகனப் பராமரிப்புச் செலவு என செலவின விபர இலக்கம் 256-1-1-0-1301 இன் கீழ் மீள்வரும் செலவினமாக கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், அச் செலவானது மூலதனச் சொத்துக்களைப் புனரமைத்தல் மற்றும்	256-1-1-0-2003 எனும் செலவின விடயத்தினூடாக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததாகவும், இவ்வருடத்தில் சரியான செலவின விடயத்தினூடாக ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்குப் பதியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	செலவினங்களை கணக்கு வைக்கும் போது சரியான செலவின விடய இலக்கத்தின் கீழ் கணக்கு வைத்தல் மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன், அது உறுதிப்படுத்தப்படும் விதத்தில் ஓர் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றை உருவாக்க வேண்டும்.

மேம்படுத்தலும் எனும் செலவின விபர இலக்கம் 256-1-1-0-2003 இன் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மூலதனச் செலவுகள் அத்தொகையால் அதிகமாகவும், மீள்வரும் செலவுகள் அத்தொகையால் குறைவாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தன.		

(ஆ) மூலதனச் செலவினம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சமூக சேவைகள் பிரிவிற்காக அச்சுப்பொறியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 82,142 செலவிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 57,930 தொகையிலான செலவு மாத்திரம் சொத்துக்கள் கையகப்படுத்தல் என கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள கணினி உபகரணங்களின் பெறுமதி ரூபா 24,212 ஆல் குறைவாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	நிருவாகச் செலவுகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பகுதியுடன் சேர்த்து முழுப் பெறுமதியும் 2025 பெப்ரவரி மாதத்தில் கணக்கு வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சொத்தின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலான நிதிக்கூற்றுக்களின்படி நிதி அல்லாத சொத்துக்களின் 06 பிரிவுகளின் இறுதி மீதிகளின் கூட்டுத்தொகையானது ரூபா 6,897,697,467 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின்படி திறைசேரியினால் அச்சிடப்பட்ட SA-82 அறிக்கையில் 2024 ஜனவரி 01 ஆம் திகதியன்று அச் சொத்துப் தொகுதிகள் 06 இற்கும் உரிய ஆரம்ப மீதிகளின் கூட்டுத்தொகையானது ரூபா 2,096,080,707 ஆக	ஆரம்ப மீதி மாற்றம் என்பது கணினி முறைமையில் இடம்பெறும் ஓர் செயற்பாடு எனவும், அது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திற்குச் சென்று இவ்வருடத்தினுள் அதனைச் சரியானதாக அமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.	இணக்கமின்மைகளுக்குக் காரணமான விடயங்களைப் பரிசீலனை செய்து, அந்த இணக்கமின்மைகளைச் சரியானதாக அமைத்து, நிதி அல்லாத சொத்துக்களின் சரியான மீதியை உறுதிப்படுத்தல் வேண்டும்.

	இருந்தமையினால், அம்மீதிகளுக்கிடையில் ரூபா 4,801,616,760 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்ட போதிலும், இந்த இணக்கமின்மைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.		
(ii)	மீளாய்வாண்டில் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவுகளின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திறைசேரியினால் அச்சிடப்பட்ட SA-82 அறிக்கையின்படி முறையே ரூபா 18,827,797 மற்றும் ரூபா 11,521,736 ஆக இருந்த போதிலும், ACA-2(ii) காசுப்புத்தகத்தின்படி அம்மீதிகள் முறையே ரூபா 17,946,182 மற்றும் ரூபா 13,852,972 ஆக இருந்தமையினால், முறையே ரூபா 881,615 மற்றும் ரூபா 2,331,236 தொகையான இணக்கமின்மைகள் காணப்பட்டன.	இனிவரும் காலங்களில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிருக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	-மேற்படி-
(iii)	2018 திசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட 04/2018 இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின்படி, 2024 ஆம் வருடத்தில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 36 வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதிக்கும் அந்த வாகனங்களுக்குரியதாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதிகளுக்கும் இடையில் ரூபா 108,560,000 தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.	இந்த வாகனங்களின் பெறுமதிகளைக் கணக்கு வைத்தலுக்குரிய தகவல்கள் கிடைக்காதமையினால், சொத்துக் கணக்கு வைக்க புதுப்பிக்கப்படவில்லை எனவும், சம்பந்தப்பட்ட தகவல்கள் கிடைத்ததன் பின்னர் உரிய திருத்தம் செய்யும் பணிகள் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.	இணக்கமின்மைகளுக்குக் காரணமான விடயங்களைப் பரிசீலனை செய்து, அந்த இணக்கமின்மைகளைச் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(iv)	டபிள் கெப் வண்டிகள் மாவட்டச் செயலகத்தால் பயணிகள் வாகனம் பிரிவின் (Passenger Vehicle) கீழ் ஜீப் (Jeep) வகையின் கீழும், திவுலபிட்டிய பிரதேச செயலகம் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலகங்களால் சரக்கு வாகனம்	2018 ஆம் வருடத்திற்கு முன்னர் இருந்து சொத்துக்களைக் கணக்கு வைக்க மேற்கொள்ளப்பட்ட செயன்முறையின்படி சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக மீண்டும்	நிதி அல்லாத சொத்துக்களைக் கணக்கு வைக்கம்போது சரியான வகைப்படுத்தலின்படி மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், உரிய திருத்தங்கள்

	பிரிவின் (Cargo Vehicle) கீழும் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், உழவு இயந்திரங்களும் நீர்த்தாங்கிகளும் மாவட்டச் செயலகத்தால் விவசாய வாகனங்கள் (Agriculture) பிரிவின் கீழும், திவுலபிட்டிய பிரதேச செயலகத்தால் சரக்கு வாகனம் (Cargo Vehicle) பிரிவின் கீழும் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும், தொம்பே பிரதேச செயலகம் சேவைப் பியச 02 அமைந்துள்ள காணிகளின் பெறுமதியையும் கட்டிடங்களின் கீழும் குறிப்பிட்டிருந்தமையினால், நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கைகளில் சொத்துக்களைப் பதிவுசெய்யும்போது சரியான வகைப்படுத்தலின்படி மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.	ஆராய்ந்து பிரதேச செயலகங்களுக்குப் பொதுவாக அறிவுறுத்தல்களை வழங்கித் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தொம்பே பிரதேச செயலகத்திற்கு 2022 ஆம் வருடத்தில் கிடைத்த தகவல்களின்படி சேவைப் பியச 02 கணக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.	மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(v)	ஒரு பேருந்தும் 3 டபிள் கெப் வண்டிகளின் உரித்து மாவட்டச் செயலகத்துக்குச் சொந்தமாக இருந்தும், அந்த வாகனங்கள் வேறு நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதில் ஒரு டபிள் கெப் வண்டியைத் தவிர ஏனைய வாகனங்கள் மாவட்டச் செயலகத்தின் சொத்துக்களாகக் கணக்கு வைக்கப்படவில்லை.	இந்த வாகனங்களின் தகவல்கள் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் , அந்த வாகனங்களைத் தற்போது பயன்படுத்தும் நிறுவனங்களுக்குக் கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	அனைத்து வாகனங்களையும் மாவட்டச் செயலாளரிடம் மீளப் பெற்றுக் கொள்வது அல்லது முறையான விதத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(vi)	மாவட்டச் செயலகத்திற்கு உரித்து உள்ளதும் பயன்படுத்தப்படுவதுமான ரூபா 20,000,000 பெறுமதியான டபிள் கெப் வண்டியொன்றின் பெறுமதி நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கையில் உள்ளடக்கப்படாதமையினால், வாகனங்களின் பெறுமதி அப் பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	KW-7180 இலக்க வாகனமானது உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் திட்டமிடல் பிரிவின் பொறுப்பில் காணப்பட்டதுடன், அதனைக் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களின் பெறுமதிகளும் கணக்கு வைக்கப்படல் வேண்டும்.
(vii)	உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள நீர்கொழும்பு, கட்டான மற்றும் வத்தளை பிரதேச செயலகங்களால் பயன்படுத்தப்படும் 3 வாகனங்களின் பெறுமதிகளின் கூட்டுத்தொகையாக ரூபா 14,700,000 மாவட்டச் செயலகக் கணக்குகளினுள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும்,	வாகனங்களின் உரித்தினை மாவட்டச் செயலாளரிடம் கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	மாவட்டச் செயலகத்தால் பயன்படுத்தப்படும், உரித்து வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை முறையான விதத்தில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல்

	அந்த வாகனங்களைக் சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.		வேண்டும்.
(viii)	10 பிரதேச செயலகங்களுக்கு உரிய 138 காணிப் பகுதிகளும் மற்றும் 08 பிரதேச செயலகங்களுக்கு உரிய 55 கட்டிடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு, அந்தப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	தொடர்ந்தும் மதிப்பீடு செய்யப்படவுள்ள காணிகளும் கட்டிடங்களும் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	மாவட்டச் செயலகத்திற்கோ பிரதேச செயலகங்களுக்கோ சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளும் கணக்கு வைக்கப்படல் வேண்டும்.
(ix)	2024 நிதிக்கூற்றுக்களின்படி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று பூர்த்தியாகாத வேலைகளின் மீதியானது ரூபா 4,839,864,746 ஆக இருந்ததுடன், கணக்குகள் பிரிவிலிருந்து பெறப்பட்ட செலவின அறிக்கைகளின்படி அந்த மீதியானது ரூபா 4,772,812,452 ஆக இருந்தது. அதன்படி, ரூபா 67,052,294 தொகையான இணக்கமின்மைகள் காணப்பட்டது.	நிதிக்கூற்றுக்களின்படி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று பூர்த்தியாகாத வேலைகளின் மீதியானது ரூபா 4,839,864,747 ஆக இருப்பதுடன், அதுவே சரியானதாகும். இருப்பினும், கணக்குகள் பிரிவிலிருந்து பெறப்பட்ட செலவின அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பது மாவட்டச் செயலக நிருவாகத் தொகுதியை நிர்மாணித்த ஒப்பந்த நிறுவனத்திற்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுத் தொகை மாத்திரமேயாகும்.	இணக்கமின்மைகளை பரிசீலித்து, உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(x)	மாவட்டச் செயலகங்களுக்கும் மற்றும் பிரதேச செயலகங்களுக்கும் சொந்தமான நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கைகளில் பதியப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்துக்களுக்கும் உரிய பெறுமதிகள் பேரேட்டுப் பதிவுகள் மூலம் கடந்த வருடங்களில் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பேரேட்டுப் பதிவுகளுக்கு உரிய உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அடங்கிய கோப்பொன்றை அலுவலகங்கள் பேணிவராதமையினால், அந்தச் சொத்துக்களின் பெறுமதிகளின் சரியான தன்மையை கணக்காய்வின்போது உறுதிப்படுத்திக் கொள்வது கடினமானதொரு காரியமாக இருந்தது.	கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை. இது சம்பந்தமாக ஆவணக்கோப்பொன்றைப் பேணுவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.	பற்றுச்சீட்டுக்களுக்கு உரிய உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அடங்கிய கோப்பொன்று பேணிவரப்படல் வேண்டும் என்பதுடன், அவை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஈ) கட்டுநிதி மீதி

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 நவம்பர் 04 ஆம் திகதியிடப்பட்ட திறைசேரிச் செயற்பாட்டு வழிகாட்டல் இலக்கம் 06/2020 இன் பிரகாரம், 2025 சனவரி 03 ஆந் திகதி 2024 ஆம் வருடத்திற்கான கட்டுநிதி தீர்ப்பனவு மேற்கொள்வதற்காக ஆண்டின் இறுதியில் காசுப்புத்தக மீதியை பொதுத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு உரிய தொகையை உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கை பேணிவரும் வங்கிக் கிளைக்கு கையளித்து பற்று அறிவித்தலைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. எனினும், கம்பஹா மாவட்டச் செயலகத்தினால் 2024 ஆம் வருடத்திற்கான கட்டுநிதி தீர்ப்பனவை மேற்கொள்வதற்காக உரிய தொகை திறைசேரிக்கு 18 நாட்கள் தாமதத்துடன் 2025 ஜனவரி 21 ஆம் திகதியே அனுப்பப்பட்டிருந்தது.	2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கட்டுநிதி கணக்கில் ரூபா 3,000,000 மீதியொன்று நிலவுவது கணக்குத் தீர்க்கும் தினத்திற்குப் பின்னரே அவதானிக்கப்பட்டமையினால், உடனடியாகவே திறைசேரிக்கு பணம் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	வழிகாட்டலின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ காசுப்புத்தக மீதியை பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(உ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	தொம்போ பிரதேச செயலகத்திற்கு உரிய முதியேதர்களுக்கான செயலகத்தினால் வழங்கப்பட்ட பேரேடு 2024 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் வரை மட்டுமே புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் தினமான 2024 நவம்பர் 20 வரை 07 மாதங்களுக்கு அந்த பேரேடு புதுப்பிக்கப்படாமல் இருந்ததன் காரணமாக, அந்த மாதங்களுக்குள் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மேல் சலுகை பெறாத சலுகைதாரர்களின் எண்ணிக்கை அந்த பேரேட்டுப் பட்டியல் மூலம் அடையாளம் காணப்படவில்லை.	முதியோர்களுக்கான படிகள் விடயப்பொறுப்பான உத்தியோகத்தர் வேறொரு பிரிவுக்கு மாற்றப்பட்டதன் காரணமாக, அந்தப் பதிவேட்டைத் தொடர்ச்சியாகப் புதுப்பிப்பதற்கு சிரமமாக இருந்தது.	பதிவேட்டைப் புதுப்பித்து பேணிவருதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ii)	2023 நவம்பர் 07 ஆம் திகதியிடப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 03/2023 இன் 05 ஆம் பந்தியின் பிரகாரம், மாவட்டச் செயலகம், கம்பஹா மற்றும் மீரிகம பிரதேச செயலகங்களில் அங்கத்தவர் கடன் பதிவேடுகள் (சீ.சீ 10) படிவத்தின்படி முறையாக மீதிப்படுத்தப்பட்டுப் பேணிவரப்படவில்லை.	அங்கத்தவர் கடன் பதிவேட்டைப் புதுப்பித்துச் சரியாகப் பேணிவருதல் சம்பந்தமாக கம்பஹா மாவட்டச் செயலகம், கம்பஹா மற்றும் மீரிகம பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், தற்போது சரியாகப் பேணிவரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	அங்கத்தவர் கடன் பதிவேடு முறையாக மீதிப்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட்டுப் பேணிவரப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(iii)	நிதிப் பிரமாணம் 1645(அ) இன் ஏற்பாடுகளின்படி, வாகனங்களுக்குரிய 267 ஆம் இலக்க பொதுப் படிவத்தின் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் முறையான விதத்தில் புதுப்பிக்கப்பட்டுப் பேணிவரப்படவில்லை.	குறைபாடுகளைச் நிவர்த்தி செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.	ஒவ்வொரு வாகனத்திற்கும் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பூர்த்தி செய்து நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகமொன்றை பேணிவரல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் 1.6.1(இ)(i) பந்திக்கமைய கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த அறிக்கையின் 1.6.1 (இ) (viii) ஆம் பந்தியின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	09 மீண்டுவரும் செலவினத் தலைப்புக்கள் மற்றும் ஒரு மூலதனச் செலவினத் தலைப்புக்களின் கூட்டுத்தொகையாக ரூபா 95,087,150 தொகையான ஒதுக்கீடுகள் நிதி பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றப்பட்டிருந்ததுடன், அது	எதிர்பார்த்தபடி சம்பளங்கள் அதிகரிக்காமையும், மேலதிக நேரக் கொடுப்பனவு, பராமரிப்புச் செலவு, தபால் செலவு குறைவடைதலும் மற்றும் கட்டிட நிர்மாணிப்புக்களுக்காக எதிர்பார்த்தபடி பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமையும் இதற்குக்	சரியானதும் நடைமுறைக்குரியதுமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு முடிந்தளவு நடவடிக்கை எடுக்கப்படல்

	சதவீதம் 01 இலிருந்து சதவீதம் 73 வரையான வீச்சில் காணப்பட்டமையினால், முறையான விதத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	காரணங்களாகும்.	வேண்டும்.
(ஆ)	17 மீண்டுவரும் செலவினத் தலைப்புக்கள் மற்றும் 02 மூலதனச் செலவினத் தலைப்புக்கள் என்பவற்றுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய ஒதுக்கீடான ரூபா 110,600,000 இலிருந்து ரூபா 74,067,574 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமையினால், மீதியானது ரூபா 36,532,426 ஆக இருந்ததுடன், மீதியானது தேறிய ஒதுக்கீட்டின் சதவீதம் 17 இலிருந்து சதவீதம் 99 வரையான வீச்சில் காணப்பட்டது.	வருடத்தினுள் இரண்டு தேர்தல்கள் இடம்பெற்றமையினால் பிரயாணச் செலவுகள், எரிபொருள் செலவுகள் குறைவடைதல், எழுது கருவிகளை சிக்கனமாகப் பயன்படுத்துதல், சில செலவுகள் குறைவடைதல், பராமரிப்புச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படல், வளாகத்திலுள்ள ஏனைய நிறுவனங்களுக்கிடையில் மாதாந்த பற்றுச்சீட்டுக்களுக்கான கட்டணங்கள் பிரிந்து செல்லல், காப்புறுதி தவணைக் கட்டணங்கள் குறைவடைதல், செலவுகளை முகாமைத்துவம் செய்தல், உத்தியோகத்தர்கள் சொத்துக்களுக்கான கடன்களை விண்ணப்பித்தல் குறைவடைதல் போன்ற காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.	-மேற்படி-.
(இ)	03 செலவினத் தலைப்புக்கள் சம்பந்தமாக நி.பி. 66 மாற்றங்கள் மேற்கொண்டதன் பின்னரும், மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் சதவீதம் 17 இலும் அதிகமான வீதத்தில் ஒதுக்கீடுகளில் சேமிப்புகள் காணப்பட்டது.	கடிதப் போக்குவரத்துக்கள் குறைவடைந்தமையினால் தபால் செலவுகள் குறைவடைதல், எதிர்பார்த்தபடி கட்டிட நிர்மாணிப்புப் பற்றுச்சீட்டுக்கள் கிடைக்காதிருத்தல், எரிபொருள் செலவுகள் குறைவடைதல் என்பன காரணங்களாக இருந்தன.	-மேற்படி-
(ஈ)	கம்பஹா மாவட்டச் செயலாளரின் புதிய அலுவலகத் தொகுதி நிர்மாணிப்பதற்காக மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வருடத்தினுள் ரூபா 590.8 மில்லியனின் மொத்த தேறிய ஒதுக்கீடு கிடைத்திருந்ததுடன், அதிலிருந்து ரூபா 355.5 மில்லியன் மாத்திரமே செலவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 235.2 மில்லியன் அதாவது சதவீதம் 39.8 தொகையான நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கட்டிட நிர்மாணிப்புக்களுக்கு உரிய பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அனைத்து ஒதுக்கீடுகளும் பயன்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.	குறிப்பானதொரு பணிக்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து உச்சப் பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டினை பயன்படுத்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மரணமடைந்தமை குறித்து அறிவிப்பதில் தாமதம், ஓய்வூதியச் சுற்றறிக்கைகளுக்கு அமையச் செயற்படாதிருத்தல் மற்றும் வேறு காரணங்களின் நிமித்தம் கம்பஹா மாவட்டத்தில் உள்ள 13 பிரதேச செயலகங்களால் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 36,115,771 தொகையான ஓய்வூதியம் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. மேலதிகமாக வழங்கப்பட்ட ஓய்வூதியம் சம்பந்தமாக 09 பிரதேச செயலகங்களுக்கு உரிய கணக்காய்வுக்குக் கோரப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	முறையானதொரு பரிசோதனையை மேற்கொண்டு, மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்கிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், மேலதிகமாக வழங்கப்பட்ட ஓய்வூதியத்தை மீள அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2006 திசெம்பர் 15 ஆம் திகதியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 19/2006 இன் பிரகாரம், தனது பிரிவுக்குரிய ஏதேனும் ஓய்வூதியக்காரர் மரணமடைந்த பின்னர் 07 நாட்களுக்குள் பிரதேச செயலகத்திற்கு அறிவித்தலை ஒரு கிராம அலுவலரால் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், 2019 மே 30 ஆம் திகதியிடப்பட்ட அரச நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2019 இன் பிரகாரம், மரணப் பதிவுப் பதிவாளர்களிடமிருந்து பி 73 ஆம் இலக்க அறிக்கைக்கான தகவல்களைப் பெற்றுக் கொண்டு, தமது அலுவலகத்திற்குரிய ஓய்வூதியம் பெறுபவர்களின் பதிவேட்டைப் புதுப்பிப்பதற்குப் பிரதேச செயலாளர்கள் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தும், அவ்வாறு செய்யாததன் காரணமாக ஓய்வூதியக்காரர் மரணமடைந்த பின்னரும் அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதுடன், அந்தப் பணத்தை மீள அறவீடு செய்வது கடினமானதொரு காரியமாக இருந்தது. அதன்படி, மரணமடைந்தவிட்டமை குறித்து அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக மேலதிகமாகச் செய்யப்பட்ட	மேலதிகமாக வழங்கப்பட்ட ஓய்வூதியம் மீள அறவீடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மரணமடைந்த ஓய்வூதியக்காரர்களின் தகவல்களைக் காலக்கிரமப்படி அறிக்கையிட்டுப் பதிவேடுகளைப் புதுப்பிக்காத பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், மேலதிகமாக வழங்கப்பட்ட ஓய்வூதியத்தை மீள அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

கொடுப்பனவுகளிலிருந்து கம்பஹா, நீர்கொழும்பு, அத்தனகல்ல, பியகம மற்றும் தொம்பே பிரதேச செயலகங்களில் முறையே 68, 09, 01, 05 மற்றும் 04 ஓய்வூதியக்காரர்களுக்காக முறையே ரூபா 6,117,119, ரூபா 775,891, ரூபா 249,891, ரூபா 571,145 மற்றும் ரூபா 597,091 ஆகியன 2024 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது மீள அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது.

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

	அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், மாவட்டச் செயலகத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காகச் செயற்றிறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டுப் பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும். அத்துடன், அந்த முறைமையின் செயற்றிறன் குறித்து மீளாய்வு செய்யப்பட்டு, அதற்கமைய முறைமையைச் செயற்றிறன் மிக்கதாகக் கொண்டு செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதுடன், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் செய்யப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத்தகைய மீளாய்வுகள் செய்யப்பட்டதாகக் கூறும் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	நிதிக் கட்டுப்பாடு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை வலுப்படுத்த மற்றும் சான்றுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4:2:2, 4:2:4, 4:2:5, 4.3, 4.4, 4:5, 4:6 மற்றும் 6:3 ஆம் பிரிவு	ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொகையாக ரூபா 704,357 தொகையான கடன் மீதியும் மற்றும் மரணமடைந்த 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 746,325 தொகையான கடன் மீதியும் 2025 மார்ச் மாதம் முடிவடையும் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்தும் மரணக் கொடையிலிருந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மாதாந்த ஓய்வூதியத்திலிருந்து தவணைகள் மூலம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின்படி கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். .
(ஆ)	2016 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின்ன் 3.1 ஆம் பந்தி	மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான 07 வாகனங்களுக்குரிய எரிபொருள் எரிப்புப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக குழூம் வாகனங்களுக்குரிய எரிபொருள் எரிப்புப் பரிசோதனையை மேற்கொள்வது தாமதமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(இ)	2020 செப்தெம்பர் 18 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 16/2020 கொண்ட உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவு	சுற்றறிக்கையின் பிரகாரம், அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரதேச எல்லைக்குள் உள்ள 151 கிராம அலுவலர் அலுவலகங்களில் 52 அலுவலகங்கள் மட்டுமே பரிசோதிக்கப்பட்டிருந்ததுடன் , அதில் 51 அலுவலகங்கள் நிருவாக கிராம அலுவலரால் பரிசோதிக்கப்பட்டிருந்தன. பிரதேச செயலாளரினால் எந்தவொரு கிராம அலுவலர் அலுவலகமும் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது நிருவாக கிராம அலுவலரினால் 76 அலுவலகங்களும் மற்றும் உதவிப் பிரதேச செயலாளரினால் ஒரு அலுவலகமும் பரிசோதிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் எஞ்சிய அலுவலகங்களும் பரிசோதிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	குறைந்தபட்சம் 04 மாதங்களுக்கு ஒருமுறையேனும் ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகத்தையும் உள்ளடக்கும் வகையில் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் நிருவாக கிராம அலுவலர் என்பவர்களால் பொருத்தமானவாறு பிரித்துக் கொண்டு பரிசோதனைக்குட்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ)	2019 ஏப்ரல் 04 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 10/2019 கொண்ட உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை	கிராம அலுவலர்களுக்குரிய பொதுப் பிரிவினர் தினக் கூட்டங்களை மாதத்திற்கு ஒருமுறை நடத்துவது கட்டாயமான போதிலும், 2023 மற்றும் 2024 ஆம் வருடங்களில் கம்பஹா மாவட்டப் பிரதேச எல்லைக்குள் உள்ள 08 பிரதேச செயலகங்கள் அவ்வாறு கூட்டங்களை நடத்தியிருக்கவில்லை.	சனத்தொகை மற்றும் வீடமைப்புப் புள்ளிவிபரக் கணக்கெடுப்பிற்கு உரிய இறுதிக் கட்டச் செயற்பாடுகள், தேர்தல் நடவடிக்கைகள், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அரிசி விநியோகிக்கும் செயற்பாடுகள், சீரற்ற காலநிலைகள் போன்ற பல்வேறு காரணங்களினால் 2024 ஆம் வருடத்தினுள் கூட்டங்களை நடத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.	கிராம அலுவலர்களுக்குரிய பொதுப் பிரிவினர் தினக் கூட்டங்கள் மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்படல் வேண்டும். .
(உ)	2021 பெப்ரவரி 12 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 02/2021 கொண்ட அரச பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் சுற்றறிக்கை	மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டியிருந்தபோதிலும், கம்பஹா மாவட்டச் செயலகத்தினால் 2023 மற்றும் 2024 ஆம் வருடங்களில் முறையே 07 மற்றும் 04 மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டிருந்தன.	கணக்காய்வு அவதானிப்புகள் சரியானவை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரினால் வழங்கப்படும் நாட்களுக்கமையவே குழு நடத்தப்படுவதாகவும் மற்றும் 2024 ஆம் வருட தேர்தல் காரணமாக கூட்டங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஊ)	2021 ஜனவரி 02 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 01/2021 கொண்ட சுற்றாடல் சுற்றறிக்கை	மாவட்டச் சுற்றாடல் குழுவானது 02 மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டியிருந்த போதிலும், 2023 ஆம் வருடத்தினுள் மாவட்டச் சுற்றாடல் குழு ஒரு தடவை மாத்திரமே கூட்டத்தை நடத்தியிருந்ததுடன், 2024 ஆம் வருடத்தினுள் எந்தவொரு கூட்டத்தையும் நடத்தியிருக்கவில்லை.	மாவட்டச் சுற்றாடல் குழுவின் அழைப்பாளராக உரிய அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், குழுவை அழைக்கும் செயற்பாட்டை அந்த உத்தியோகத்தர் மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்டச் சுற்றாடல் குழுவானது 02 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படல் வேண்டும்.

(எ)	2021 பெப்ரவரி 22 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் NFS/2021/01 கொண்ட விவசாய அமைச்சின் சுற்றறிக்கை	மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவானது மாதாந்தம் கூட வேண்டியிருந்த போதிலும், 2023 மற்றும் 2024 ஆம் வருடங்களுக்காக முறையே 05 மற்றும் 03 குழுக்கள் மட்டுமே நடத்தப்பட்டிருந்தன.	மாவட்ட விவசாயக் குழுவிலும் மற்றும் பருவ காலக் கூட்டங்களிலும் உரத் திட்டம் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்படுவதால் இந்தக் குழுவின் கூட்டத்தை நடத்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவானது மாதாந்தம் கூடல் வேண்டும்.

3.5 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்தின் 04 பொது வைப்புக் கணக்குகள் சம்பந்தமாக 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 137,751,747 தொகையான காலாவதியான மீதிகள் காணப்பட்ட போதிலும், நிதி பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	02 வருடங்களை விஞ்சிய 03 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய மீதிகளிலிருந்து தற்போது ரூபா 35,409,918 தீர்க்கப்பட்டுள்ளதாகவும், வழக்குத் தீர்ப்பு கிடைக்கும் வரையில் தீர்க்கப்பட முடியாத ரூபா 4,418,000 காணப்படுவதாகவும், எஞ்சிய மீதிகள் எதிர்காலத்தில் தீர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், வழக்கு நடவடிக்கைகள் காணப்படுதல், காணி சுவீகரிப்பு செயற்பாடுகள் முற்றுப்பெறாதிருத்தல் போன்ற காரணங்களினால் காணி வைப்புக்களைத் தீர்க்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	முறையான விதத்தில் நடவடிக்கை எடுத்து நிதி பிரமாணத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானமாக எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான வங்கி இணக்கக் கூற்றின்படி வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் ரூபா 2,125,374 தொகையான மீதிக்குரிய 11 காசோலைகள் 2025 பெப்ரவரி 18 ஆம் திகதி	உரிய பொருட்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையினாலும் மற்றும் பொருட்கள் இறுதியாக பயன்படுத்துவதற்குப் பொருத்தமான விதத்தில் செயற்படுத்தப்பட்டு	பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளாமல் நிதி பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்காமல் கொடுப்பனவுகளை

வரையிலும் உரிய தரப்பினர்களுக்கு வழங்கப்படாமல் கணக்குகள் பிரிவிடம் காணப்பட்டன. அதில் பொருட்கள் கிடைக்காமையின் காரணமாக பயனாளிகளுக்குக் கையளிக்கப்படாத ரூபா 284,473 மதிப்புக்குரிய 05 காசோலைகள், பற்றுச்சீட்டுக்கள் கிடைக்காமையின் காரணமாக பயனாளிகளுக்குக் கையளிக்கப்படாத ரூபா 123,972 மதிப்புக்குரிய 02 காசோலைகள், பொருட்கள் இறுதியாக பயன்படுத்துவதற்குப் பொருத்தமான விதத்தில் செயற்படுத்தப்படும் வரையில் பயனாளிகளுக்குக் கையளிக்கப்படாத ரூபா 1,367,775 தொகையான 01 காசோலை மற்றும் அறிவிக்கப்பட்டிருந்தும் காசோலைகளைப் பெற்றுக் கொள்வதற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 349,154 மதிப்புள்ள 03 காசோலைகள் என்பன அடங்கியிருந்தன.	ஒப்படைக்கப்பட்டுள்ளமையினாலும், உரிய 11 காசோலைகளும் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	அனுமதித்த, சிபாரிசு செய்த மற்றும் உறுதிப்படுத்திய உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 03 ஆம் பந்தியின்படி ஒவ்வொரு நிதியாண்டிற்கும் அனுமதிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அதற்காக உரிய படிவங்கள் வழிகாட்டல் இலக்கம் 12 இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. கம்பஹா மாவட்டச் செயலகத்தினால் 2024 ஆம் வருடத்திற்காக செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும், மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தினுள்	கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் தனித்தனியாகத் தயாரிக்கப்பட்டிருந்தன என்பதுடன், வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டமாக ஒன்றாகச் சேர்த்துச் சுட்டிக்காட்டப்படவில்லை. இது சம்பந்தமாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் வருடத்திற்காகத் தேவையான சரியான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல் அறிவுறுத்தல்களின்படி செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், அதன்படிச் செயற்படாத தரப்பினர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

உள்ளடக்கப்பட வேண்டிய, உரிய வருடத்திற்காகப் புதுப்பிக்கப்பட்ட நிறுவனத்தின் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையில் இருக்கும் பதவியணி பற்றிய விபரங்கள், உரிய வருடத்திற்காக அனுமதிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் அடிப்படையில் முன்னுரிமைகளுக்கமையத் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கான திட்டம் (Activity Plan), நடைமுறைப்படுத்தும் கால எல்லை (Time Line) மற்றும் அந்தக் செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் / விளைவுகள் (Output / Outcome), வருடாந்தச் செயற்பாடுகளுக்கான நிதித் தேவைப்பாடுத் திட்டம், திட்டமிடப்பட்டுள்ள பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உரிய வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பியகம பிரதேச செயலகத்தினால் 2024 ஆம் வருடத்தினுள் 06 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட 173 திட்டங்களில், ரூபா 27,725,079 மதிப்புக்குரிய 52 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள நிறைவு செய்யப்படாத 32 செயற்திட்டங்களில் 27 செயற்திட்டங்கள் உரிய காலப் பகுதியினுள் பொருட்களைக் கொண்டு வர முடியாமையின் காரணமாகவும், பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள செயற்திட்டம் வேறு ஒரு பிரிவுக்கு மாற்றப்பட்டமையினாலும் மற்றும் கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள 19 செயற்திட்டங்கள் சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	உரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முறையான விதத்தில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கொகாரு செயற்திட்டத்தை தயாரித்தலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.3 எதிர்பார்த்த பெறுபேறுகளை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 ஆம் வருட சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீரிகம பிரதேச செயலாளரின் பிரதேச எல்லையில் உள்ள வேபொடமுல்ல மட்பாண்ட உற்பத்தி கிராமத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 36 பயனாளிகளுக்காக மூலப் பொருட்கள், உபகரணங்கள் முதலியன கொள்வனவு செய்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற செயற்பாடுகளுக்காக ரூபா 8,607,956 செலவு செய்யப்பட்டிருந்ததுடன், அதிலிருந்து அலங்காரப் பொருட்களைச் சுடுவதற்காக ரூபா 2,592,000 மதிப்புக்குரிய 02 மின்சார அடுப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதிலும், இந்த மின்சார அடுப்புக்களை இயக்குவதற்காக அதிகமான மின்சார அலகுகள் செலவாவதன் காரணமாக அந்த அடுப்புக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மிகவும் அதிகளவான மின்சார அலகுகள் செலவாவதன் காரணமாக பயனாளிகளால் இந்த அடுப்புக்கள் பயன்படுத்தப்படுவதில்லை என்பதுடன், சூரிய மின்கலப் பலகைப் கட்டமைப்பொன்றை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அடைய எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முறையான மேற்பார்வையும் வழிகாட்டல்களும் உரிய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	2021 ஆம் வருட சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீரிகம பிரதேச செயலாளரின் பிரதேச எல்லையில் உள்ள நாள்ள செங்கல் உற்பத்தி கிராமத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 31 பயனாளிகளுக்காக மூலப் பொருட்கள், உபகரணங்கள் முதலியன கொள்வனவு செய்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற செயற்பாடுகளுக்காக ரூபா 6,808,050 அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், அதன் உண்மையான செலவு ரூபா 6,072,642 ஆகக் காணப்பட்டது. ஆயினும், இந்த 31 பயனாளிகளில் தற்போது 17 பேர் மாத்திரமே கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன், பல்வேறு காரணங்களினால் 14 பயனாளிகள் கைத்தொழிலிலிருந்து விலகியுள்ளனர் என்பதுடன், அவர்களுக்கு வேலைக்	செங்கல் உற்பத்திக்காகத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள கஷ்டங்கள் அத்துடன் மூலப் பொருட்களின் அதிக விலை, செங்கல் சுடுவதற்காகப் பயன்படுத்தப்படும் விறகிற்கு அதிக விலை செலுத்த வேண்டியேற்படல், பொருளாதார நெருக்கடியின் போது நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தடைப்படுதல் போன்ற காரணங்களினால் உற்பத்தியாளர்கள் கைத்தொழிலிலிருந்து விலகுதல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-

	கொட்டகைகள் மற்றும் மட்கட்டிகள் மூடும் கொட்டகைகளை அமைப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,949,320 தொகையான பணம் பயனற்ற செலவாக மாறியிருந்தது.		
(இ)	கம்பஹா பிரதேச செயலகத்தினால் 2024 ஆம் வருடத்தினுள் 13 கனோப்பி கூடாரங்களையும் எஞ்சிய செயற்திட்டப் பணத்திலிருந்து பிளாஸ்டிக் கதிரைகளையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,567,595 தொகையான பணம் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆயினும், இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் 13 கனோப்பி கூடாரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 1168 பிளாஸ்டிக் கதிரைகள் கொள்வனவு செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட ரூபா 1,918,504 தொகையான பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன்படி, இந்த செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களையும் மற்றும் செயல்திறனையும் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	-மேற்படி-
(ஈ)	2025 ஜுலை 01 ஆம் திகதி கம்பஹா பிரதேச செயலகக் களஞ்சிய வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது, 2024 ஆம் வருடத்தின் 03 திட்டங்களுக்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 320,650 மதிப்புக்குரிய 11 பொருட்களின் வகைகளுக்குரிய பொருட்கள் உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் களஞ்சியத்தினுள் காணப்பட்டன. அதன்படி, இந்தத் செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களையும் மற்றும் செயல்திறனையும் அடைந்து கொள்ள முடியவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அடைய எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4.4 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீரிகம பிரதேச செயலாளரின் பிரதேச எல்லைக்குள் அரைவாசியாக முற்றுப்பெற்ற ‘‘நில செவண’’ கட்டிடங்கள் 07 காணப்பட்டதுடன், இந்தக் கட்டிடங்களின் நிர்மாணிப்பு 2018 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு முடிவடையும் வரையிலும் அவை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மதிப்பீட்டுப் பணம் ரூபா 14 மில்லியனாகக் காணப்பட்ட இந்த நிர்மாணிப்புக்களுக்காக இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 1.4 மில்லியன் என்பதுடன், பௌதீகப் பூர்த்தி 2 சதவீதம் ஆகக் காணப்பட்டது.	இந்தக் கட்டிடங்களின் அத்திவாரம் மாத்திரமே நிறைவு செய்யப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும், எஞ்சிய வேலைகளை நிறைவு செய்வதற்கு தேவையான ஒதுக்கீடுகள் கோரப்பட்டிருந்தும் ஒதுக்கீடுகள் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.	இந்தக் கட்டிட நிர்மாணிப்புக்காக மேலும் ஒதுக்கீடுகளை ஒதுக்கிக் கொள்வது பொருளாதார ரீதியில் பயனுள்ளதா என்பதைக் கருத்திற்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	தொம்பே பிரதேச செயலகத்திற்குரியதாக 2022 ஆம் வருடத்தின் ‘‘கம சமக பிளிசந்தரக்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 7,352,909 செலவு செய்யப்பட்ட 17 திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. அதில் 13 திட்டங்களின் பௌதீகப் பூர்த்தி சதவீதம் 45 இலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	தேசிய வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் குறைந்த முன்னேற்றத்தை பதிவுசெய்துள்ள செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டதாகவும், இந்த செயற்திட்டங்களில் 02 செயற்திட்டங்கள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.	செயற்திட்டங்களைக் காலக்கிரமப்படி நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், முறையானதொரு ஆய்வு செய்து இடைநடுவில் நிறுத்தப்பட்ட திட்டங்களை நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	2022 ஆம் வருட ‘‘கம சமக பிளிசந்தரக்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 62 மேற்கு கொங்கொடமுல்ல கிராமத்தில் உள்ள சமுதாய மண்டபத்துடன் ஒரு புதிய பகுதியைக் கூட்டி பலநோக்குக் கட்டிடமாக அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 1,200,000 இல் ரூபா 401,229 மாத்திரமே செலவு செய்யப்பட்டிருந்தது. ஒதுக்கீட்டுப் பணம் போதுமானதாகக் கிடைக்காமையின் காரணமாக நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு	2024 ஆம் வருடத்தினுள் ரூபா 500,000 அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.	இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள் குறித்து ஆய்வு செய்து அந்தத் திட்டங்கள் பிரயோசனமான ஒரு செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	செய்யப்படாமல் இருந்த இந்தத் திட்டத்திற்காக 2024 ஆம் வருடத்தினுள் பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 500,000 அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் கிராமியக் குழுவின் கோரிக்கையின்படி மதிப்பீட்டை மீண்டும் திருத்த வேண்டியேற்பட்டமை மற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குக் கால அவகாசம் இல்லாமையின் காரணமாக திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துள்ள இந்த கட்டிடத்தினுள் களைகள் வளர்ந்து, வெயிலுக்கும் மழைக்கும் உட்பட்டு அழிவடைந்து காணப்பட்டது.		
(ஈ)	2022 ஆம் வருட ‘‘கம சமக பிளிசந்தரக்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 95 A, களுவாரிப்புவ வடக்குச் சமுதாய மண்டபத்துடன் ஒரு பகுதியைக் சேரத்து சேவைப் பீடமாக அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீட்டுப் பணம் ரூபா 1,200,000 இல் ரூபா 298,958 மாத்திரமே செலவு செய்யப்பட்டிருந்தது. தேவையான ஒதுக்கீட்டுப் பணம் போதுமானதாகக் கிடைக்காமையின் காரணமாக நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாமல் இருந்த இந்த செயற்திட்டத்திற்காக 2024 ஆம் வருடத்தினுள் பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 500,000 தொகையான பணம் கிடைத்திருந்தது. அதிலிருந்து ரூபா 475,301 செலவு செய்யப்பட்டு கூரை மட்டம் வரையில் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தபோதிலும் அது பயன்படுத்துவதற்குரிய நிலைக்கு வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	பணிகளை முழுமையாக நிறைவு செய்ய போதுமான ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாமையினால் செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளமை.	-மேற்படி-.

4.5 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கம்பஹா மாவட்டச் செயலகத்தின் சூரிய மின்கலப் பலகைப் கட்டமைப்புகளை திட்டமிடுதல் மற்றும் வழங்கிப் பொருத்துவதற்காக 2024 ஆம் வருடத்தினுள் ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. 2024 ஏப்ரல் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விலைமனுக்களைக் கோருதலுக்கமைய ஒரு உற்பத்தி அலகொன்று குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ரூபா 72,927,496 (வட் வரி நீங்கலாக) பணத்திற்கான ஒப்பந்தம் 2024 ஜூன் 07 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. 2024 ஜூன் 25 ஆம் திகதி ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி 2024 ஜூன் 25 ஆம் திகதி பணிகள் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஒப்பந்தம் 2024 செப்தெம்பர் 25 ஆம் திகதி பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தபோதிலும், பணிகள் நிறைவு செய்வதற்கான காலம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது. ஆயினும், அன்று வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்படாது இருந்த இந்த திட்டத்தின் சூரிய மின்கலப் பலகைகளைத் திட்டமிடுதல், வழங்கிப் பொருத்துதல் ஆகிய பகுதிகள் மாத்திரம் 2025 பெப்ரவரி 28 ஆம் திகதி முற்றுப்பெற்றதாகப் பகுதி பணி முடிவுறுத்தல் உறுதிப்பத்திரம் ஆலோசனை நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டிருந்தது. சூரிய மின்கலப் பலகைப் கட்டமைப்புகளை பொருத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் மின்சாரச் செலவைக் குறைத்துக் கொள்வது என்றிருந்த போதிலும், தேசிய மின்சார சபையினால் மின்சாரம் உற்பத்தியாவதைப் பரிசோதிப்பதற்கு 2025 மே 31 ஆம் திகதி வரையில் காலம் எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமையினால் அந்த செயற்திட்டத்தின் மூலம் மேலும் மின்சாரச் செலவைக் குறைத்துக்	2024 ஆம் வருடத்தின் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடவடிக்கைகள் அத்துடன் காணப்பட்ட அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக அலுவலகக் கட்டிடத்தில் சூரிய மின்கலப் பலகைப் கட்டமைப்புகளை பொருத்துவது தாமதமானது.	தாமதக் கட்டணங்களை அறவிடுவதுடன், செயற்திட்டத்தை விரைவாக நிறைவு செய்து செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

கொள்ள முடியாமல் இருந்தது. அதன்படி, 2024 செப்டெம்பர் மாதத்தில் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த இந்த செயற்திட்டம் 2025 மே மாதம் வரையிலும் நிறைவு செய்யப்படாமல் இருந்ததுடன், ஒப்பந்தக் காலம் 02 மாதங்கள் தாமதமானமை சம்பந்தமாக ஒப்பந்தக்கார நிறுவனத்திடமிருந்து தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், எதிர்பார்த்தபடி மாதாந்த மின்சாரச் செலவில் குறைப்பொன்றை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.		

4.6 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றம் பெற்றிராத செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) ‘‘கிராம சக்தி மக்கள் இயக்க நிகழ்ச்சித்திட்டத்தின்’’ கீழ் 2017 ஆம் வருடத்திலிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் கம்பஹா மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களின் கிராம அலுவலர் பிரிவுகளினுள் 152 சங்கங்கள் உருவாக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 92,537,140 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அதில் 19 சங்கங்கள் மாத்திரமே செயலில் காணப்பட்டதுடன், எஞ்சிய 133 சங்கங்களும் செயலற்ற மட்டத்தில் காணப்பட்டன. இந்தச் செயலற்ற நிலையில் காணப்படும் கிராம சக்தி சங்கங்களிடம் தாய் கணக்குகளில் ரூபா 67,569,003 உம் மற்றும் நுண் நிதிக் கணக்குகளில் ரூபா 8,974,794 தொகையும் என மொத்தம் ரூபா 76,543,797 கூட்டுத்தொகை காணப்பட்டது. மேலும், செயலற்ற மட்டத்தில் காணப்படும் சங்கங்களைப் பதிவுசெய்வதற்காகச் செலவிடப்பட்ட செலவுகளும் மற்றும் அதற்காகச் செலவிடப்பட்ட ஏனைய செலவுகளும் பயனற்றதாக மாறியிருந்ததுடன், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 03	தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த முடியாத செயலற்ற நிலையில் காணப்படும் சங்கங்களின் பதிவை இரத்துச் செய்வதற்கும், செயலற்ற சங்கங்களிடம் உள்ள அரச நிதிகளைச் செயலில் உள்ள சங்கங்களுக்கு வழங்குவதற்கும், செயலற்ற நிலையில் காணப்படும் சங்கங்களைச் சங்கச் சட்டத்தின்படி செயலில் உள்ளதாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.	முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு செயலற்ற சங்கங்களைச் செயலில் உள்ளதாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது அல்லது சட்டத்தின்படி உள்ள அரச நிதிகளை முறையான விதத்தில் அரசாங்கத்தின் வருமானமாக எடுப்பது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள ரூபா 2,122,759 தொகையான கடன் மீதியை மீள அறவிட முடியாமல் இருந்தது. அதன்படி, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது.		
(ஆ) 2024 ஆம் வருட ‘‘சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின்’’ கீழ் கம்பஹா பிரதேச செயலகப் பிரிவின் அழுத்தகம போகமுவ பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட காளான் உற்பத்தி செயற்திட்டத்திற்காக 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஆயினும், அவர்களில் 12 பேர் மாத்திரமே செயற்திட்டத்திற்குச் சுழற்சியான பங்களிப்பை வழங்கியிருந்ததுடன், எஞ்சிய 13 பேருக்குப் பதிலாக வேறு 13 பயனாளிகள் பிரதேச செயலாளரின் அனுமதி இன்றித் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களைத் தெரிவு செய்ததற்கான அடிப்படை அல்லது கருத்திற் கொள்ளப்பட்ட அளவுகோல்கள் பற்றிய எழுத்துமூலச் சாட்சியங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. பயனாளிகள் 05 வருட காலப்பகுதிக்கு பிரதேச செயலாளருடன் உடன்படிக்கை ஒன்றினைச் செய்திருந்த போதிலும், சரியான விதத்தில் பயனாளிகள் தெரிவு செய்யப்படாமையின் காரணமாக உடன்படிக்கை செய்த மூன்று பயனாளிகள் பெற்றுக் கொண்ட பணத்தைத் திருப்பிச் செலுத்தி செயற்திட்டத்திலிருந்து விலகியிருந்தனர். மேலும், காளான் இல்லத் செயற்திட்டமொன்றைப் பயனாளிகளுக்கு வழங்காமை, வழங்கப்பட்ட பயிர்ச் செய்கைப் பைகள் தரமற்றதாக காணப்படுதல், உத்தேசிக்கப்பட்ட இடங்களிலிருந்து விதைகள் பெற்றுக் கொள்ளப்படாமை, பொலித்தீன் சீலர் இயந்திரங்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்படாமை போன்ற காரணங்களினால் இந்தத் திட்டத்தைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்ல முடியாமல் இருந்தது.	பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(இ)	2024 ஆம் வருட ‘‘சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின்’’ கீழ் கம்பஹா பிரதேச செயலகப் பிரிவின் அமுணுகொட வலயத்தில் ரூபா 1,096,500 செலவு செய்து நடைமுறைப்படுத்தப்பட்ட கிராமியக் கோழி முட்டை உற்பத்தி செயற்திட்டத்திற்காக 18 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஆயினும், திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது 08 பயனாளிகள் மாத்திரமே சுழற்சியான பங்களிப்பை வழங்கியிருந்ததுடன், எஞ்சிய 11 பயனாளிகளுக்குப் பதிலாக வேறு 11 பயனாளிகள் பிரதேச செயலாளரின் அனுமதி இன்றித் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்தப் பயனாளிகளைத் தெரிவு செய்ததற்கான அடிப்படை அல்லது தெரிவு செய்யும்போது கருத்திற்கொள்ளப்பட்ட விடயங்கள் அல்லது முதலாவதாகத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் விலகுவதற்குக் காரணம் என்ற விடயங்கள் சம்பந்தமான எழுத்துமூலச் சாட்சியங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், உரிய உத்தியோகத்தர்களின் உறுதிப்படுத்தல் இன்றி 06 பயனாளிகளுக்கு ரூபா 105,000 தொகையான இறுதி தவணைக் கொடுப்பனவை வழங்கியமை, போதுமான இடவசதி இல்லாத பயனாளிகளைத் தெரிவுசெய்தமை, கொள்வனவு செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகளில் 27-52 சதவீதம் வரையான குஞ்சுகள் விநியோகித்து குறுகிய காலத்தினுள் மரணமடைந்தமை, நியம அளவைவிட அதிகமான சேவற் பிராணிகளை வழங்கியமை மற்றும் எதிர்பார்த்தபடி முட்டை அறுவடை கிடைக்காமையின் காரணமாக திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் நிறைவேறாமல் இருந்தன.	பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	செயற்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் சம்பந்தமாக முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு உரிய தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் முறையான மேற்பார்வை மற்றும் பின்தொடர்தல் மேற்கொண்டு செயற்திட்டத்தை வெற்றிகரமாக ஆக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4.7 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் இலக்க 44 அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 47(4)(அ) ஏற்பாட்டிற்கமைய ஒவ்வொரு நிதியாண்டின் நிறைவடைந்து நூற்றி என்பது நாட்களுக்குக் குறையாத காலத்தினுள் உரிய எழுத்துமூலச் சட்டங்கள் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏனைய ஆவணங்களுக்கு மத்தியில் கணக்குகள் மற்றும் வேறு நிதி கூற்றுக்கள் உள்ளடங்கிய வருடாந்தச் செயல்திறன் அறிக்கை ஒன்றினை அந்தச் சட்டத்தின் 3(2)(அ)(i) இன் கீழ் வரவுசெலவுத் திட்ட அலகுகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், மாவட்டச் செயலகத்திற்காக வருடாந்தச் செயலாற்றல் அறிக்கையைத் தயாரிக்கும்போது மாவட்டச் செயலகத்திற்குரிய தகவல்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், கம்பஹா மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களின் தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.	கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக் கொள்கிறேன். வருடாந்தச் செயல்திறன் அறிக்கையைத் தயாரிக்கும்போது பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும் உள்ளடக்கித் தயாரிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.	உரிய சட்டத்திற்கமைய உரிய பிரதேச செயலகங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் விதத்தில் வருடாந்தச் செயல்திறன் அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	வருடாந்தச் செயல்திறன் அறிக்கையின் படிவமானது 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 12.2 ஆம் பந்திக்கமைய வழிகாட்டல் இலக்கம் 14 இற்கு இணங்காத விதத்தில் மொத்த நிதி செயல்திறன், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் இணக்கப்பாடு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.	எதிர்வரும் ஆண்டுக்கான செயல்திறன் அறிக்கையைத் தயாரிக்கும்போது வழிகாட்டல் அறிவுறுத்தல்களுக்கு இணங்கத் தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர்.	சுற்றறிக்கை மற்றும் உரிய வழிகாட்டல் அறிவுறுத்தல்களின்படி செயல்திறன் அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும்.

4.8 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பியகம பிரதேச செயலகத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்காகத் தர்மப் பாடசாலை உபகரணங்களைக்	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிடமிருந்து தெளிவுபடுத்தல் ஒன்றினைப்	முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு

	கொள்வனவு செய்கையில், பிளாஸ்டிக் கதிரை ஒன்றிற்கு ரூபா 1,601 தொகையான குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனம் ஏனைய அனைத்து விபரக்கூற்றுகளையும் பூர்த்தி செய்திருந்த போதிலும், பொருண்மையான காரணங்களைச் சுட்டிக்காட்டாமல் ரூபா 1,649 தொகையான இரண்டாவது குறைந்த விலைக்குரிய கதிரைகளைக் கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்பக் குழுவின் சிபாரிசுக்கு அமையக் கொள்வனவுக் குழு தீர்மானித்திருந்தது.	பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், மாதிரிப் பரிசோதனையின்போது இரண்டாவது நிறுவனத்தினது பிடிகளற்ற பிளாஸ்டிக் கதிரைகள் தரத்தினால் உயர்ந்தது என்று அவதானிக்கப்பட்டதாகவும் அச்சிடல் தவறுகளின் காரணமாக முதலாவது நிறுவனம் தரத்தால் உயர்ந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.	கொள்வனவுச் செயற்பாட்டில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிடுவதுடன், உரிய தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	கம்பஹா பிரதேச செயலகத்தினால் 2024 ஆம் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட 12 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,022,750 மதிப்புக்குரிய 18 கனோப்பி கூடாரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2024 ஆம் வருடத்தின் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் பட்டியலின்படி கனோப்பி கூடாரங்களுக்கான பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் இல்லாமலும் மற்றும் விலைமனுக்களைக் கோருவதற்காக வழங்குநர்களைத் தெரிவுசெய்த விதம் மற்றும் வழங்குநர்களுக்கு விலைமனுக் கோரல் கடிதங்களை அனுப்பிய விதம் பற்றிய எழுத்துமூலத் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இந்த கொள்வனவின்போது பிளாஸ்டிக் கதிரைகள், கனோப்பி கூடாரங்கள், தகரக் கூடாரங்கள், நூலக அலுமாரிகள், மண்வெட்டித் தகடுகள் மற்றும் வெள்ளைப்பலகைகள் போன்ற ஒரேவகையானவையல்லாத பொருட்களுக்காகப் பொதுவாக ஒரு விலைமனுக்கோரல் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால், ஒரேவகையான பொருட்கள் வழங்குநர்கள் அதிக தரப்பினரிடமிருந்து விலைமனுக்களைப் பெற்றுக் கொள்ள முடியாமையின் காரணமாக கொள்வனவின்போது குறைந்த விலைக்குத் தரமான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு குறைவடைந்திருந்தது.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	முறையற்ற விதத்தில் செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், வழங்குநர்களைத் தெரிவுசெய்வது முறையான விதத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	05 பிரதேச செயலகங்களுக்குரியதாக மீளாய்வாண்டின் இறுதியில் பயன்படுத்தப்படாத உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் 09 காணப்பட்டன. இவற்றில் அத்தனகல்ல மற்றும் நீர்கொழும்பு பிரதேச செயலகங்களுக்குரியதாக முறையே 02 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் ஒரு உத்தியோகபூர்வ வாசஸ்தலம் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன், கம்பஹா பிரதேச செயலகத்திற்குரியதாக ஒரு உத்தியோகபூர்வ வாசஸ்தலம் மற்றும் பியகம, தொம்பே பிரதேச செயலகங்களுக்குரியதாக முறையே 02 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் 03 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் திருத்தப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட போதிலும், திருத்தம் செய்து பயனுள்ள செயற்பாட்டிற்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அத்தனகல்ல பிரதேச செயலகத்திற்குரிய 02 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதனால் இடித்து அகற்றுவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், நீர்கொழும்பு பிரதேச செயலகத்தின் இட வசதிகள் போதாமையின் காரணமாக களஞ்சியப் பொருட்களை வைப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. கம்பஹா பிரதேச செயலகத்திற்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இந்த வருடத்தில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஒதுக்கீடுகள் போதுமானதல்லாததால் எதிர்கால வருடங்களில் மதிப்பீடுகளில் உள்ளடக்கவுள்ளதாகவும் மற்றும் பியகம, தொம்பே பிரதேச செயலகங்களுக்குரிய 05 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களைத் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.	முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு திருத்தம் செய்யக்கூடிய நிலையில் காணப்படும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களைத் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	பியகம பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான பியகம வடக்கு சேவைப் பீடம் அமைந்துள்ள கொழும்பஹேன தோட்டம் காணியிலுள்ள 06 பேர்ச்சஸ் காணியையும் மற்றும் அந்தக் கட்டிடத்தையும், தெல்கொட ‘‘நிலசெவன’’ அலுவலகம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட லாவூளுகஹவத்த காணியிலுள்ள 10 பேர்ச்சஸ் காணியையும் சுவீகரித்துக் கொள்வதற்கும் அவற்றின் பெறுமதியை மதிப்பிட்டுக் கொள்வதற்கும்	பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையினால் பொதுக் காணி மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதுடன், தெல்கொட ‘‘நிலசெவன’’ அலுவலகத்திற்காக உத்தேசிக்கப்பட்ட காணியைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்	முறையான விதத்தில் சொத்துக்களைச் சுவீகரித்துக் கொண்டு மதிப்பிட்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாமல் இருந்தது.	தெரிவிக்கப்பட்டது.	
(இ)	2021 மார்ச் 23 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 05/2021 கொண்ட உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் சுற்றறிக்கையின்படி மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளருக்குச் சொந்தமான அரசாங்கக் காணியில் சேவைப் பீடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும், தொம்பே பிரதேச செயலகத்தின் 12 சேவைப் பீடங்கள் தனியார் நன்கொடையாகப் பெறப்பட்ட காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், இந்தக் காணிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்துக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கட்டிடத்தின் உரிமை மாத்திரம் பிரதேச செயலாளருக்குரிய 13 சேவைப் பீடங்கள் மீரிகம பிரதேச செயலகத்திடம் காணப்பட்டதுடன், 03 பிரதேச செயலகங்களுக்காக மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளருக்குச் சொந்தமில்லாத காணிகளில் 04 சேவைப் பீடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.	2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் ''நில செவன'' அலுவலக நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியினுள் பிரதேச செயலகப் பிரிவினுள் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகள் இல்லாமையின் காரணமாக உரிய நிறுவனங்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொண்டு அந்த தகவல்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைத்ததன் பின்னர் அந்த நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் மற்றும் காணிகளைச் சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.	சேவைப் பீடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் காணிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	காணி மதிப்பீட்டுக்காகக் கோரிக்கைகள் 2022 ஆம் வருடத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டு பெறுமதயை வழங்குவதற்கு உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு 2024 ஆகஸ்ட் 05, 2024 ஒக்டோபர் 16 மற்றும் 2024 நவம்பர் 01 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்களின் மூலம் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, பல வருடங்களாகக் காணிகளின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குப் பிரதேச செயலகங்கள் தவறியமையினால் காணி மதிப்பீட்டு பெறுமதிகளை பெற்றுக் கொள்வதற்கும் அதன்படி அந்த பெறுமதிகளை கணக்கு வைக்கவும் முடியாமல் இருந்தது.	விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் கோரப்படும் ஆவணங்கள் மற்றும் வரைபடங்கள், நில அளவைத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொண்டு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்து மதிப்பீட்டு பெறுமதிகள் கிடைத்தவுடன் கணக்கு வைத்தல் மேற்கொள்ளவுள்ளதாகவும் மேலும் 98 காணிகள் மதிப்பீடு செய்வதற்கு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது	காணிகளின் உரிமையைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக துரிதமாக நடவடிக்கை எடுத்து அந்த காணிகளை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4.10 நிதி மோசடித் தனமையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மகர பிரதேச செயலகத்தில் 2014 ஜூலை 15 ஆம் திகதி ஏற்பட்ட காப்பறையிலிருந்த பணம் காணாமல் போனமை சம்பந்தமாக நிதி பிரமாணம் 104(1)(ஆ) இற்கமைய இடம்பெற்ற இறுதிப் பரிசோதனை அறிக்கையின்படி பிரதேச செயலாளர், கணக்காளர், பண உதவி உத்தியோகத்தர் மற்றும் சிரேஷ்ட சாராப் ஆகிய உத்தியோகத்தர்களிடமிருந்து சமமாக ரூபா 270,561 வீதம் அறவிடப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டிருந்ததுடன், 2020 செப்டெம்பர் 22 ஆம் திகதியிடப்பட்ட உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலம் உரிய அறவீட்டிற்கான சிபாரிசுகள் மற்றும் அனுமதியும் 2023 நவம்பர் 23 ஆம் திகதியிடப்பட்ட அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் நட்டத்தை அறவிடும் கட்டளையின்படி 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 1,082,245 தொகையான பணத்தையும் மற்றும் நட்டத்தில் 25 சதவீதமான திணைக்களக் கட்டணத்தையும் மோசடிக்கு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து சமமாக அறவிடப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருந்தபோதிலும் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் ரூபா 500,073 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.	மகர பிரதேச செயலகத்தின் காப்பறையிலிருந்த பணம் காணாமல் போனமை சம்பந்தமாக 2025 ஏப்ரல் 31 ஆம் திகதி வரையில் ரூபா 500,073 அறவிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.	உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டத்தை காலதாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்
(ஆ)	கம்பஹா பிரதேச செயலகத்திலிருந்து ஓய்வூதியம் பெற்றுக் கொண்ட ஒருவரின் ஓய்வூதியம் அவருக்குரிய விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் அந்த ஓய்வூதியம் பெற்றவர் மரணமடைந்ததன் பின்னர் சுமார் 05 வருட காலப்பகுதிக்கு ரூபா 2,696,304 செலுத்தப்பட்டிருந்தது. ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் 09/2014 இன் மூலம் உயிர்	ஓய்வூதியம் பெற்றவரின் மரணம் உறுதிப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மேலதிகக் கொடுப்பனவை அறவிடுவது சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.	முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	வாழ்வதற்கான உறுதிப்பத்திரங்களை வழங்காத ஓய்வூதியம் பெற்றவர்களின் ஓய்வூதியத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக ஓய்வூதியப் பயனாளியினால் உயிர் வாழ்வதற்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படாமலிருந்த போதிலும் 2013 இலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான வருடங்களில் ஓய்வூதியம் முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.	அந்த வழக்கு இன்னும் விசாரிக்கப்பட்டு வருவதனால் இந்த கடனை அறவிடுவது தாமதமாகியுள்ளது.	

4.11 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மிட்சுபிஷி கெப் ரக வண்டி ஒன்று 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதி பஸ்யால ரத்மலேவத்த மேலதிக மாவட்டச் செயலாளரின் வீட்டிலிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக பஸ்யாலவிற்கு வந்து மீண்டும் வீட்டிற்குச் செல்லும் போது வாகனத்தை ஓட்டுநரால் கட்டுப்படுத்த முடியாமையினால் ஒரு தொலைபேசி கம்பித் தூணிலும் கொங்கிறீட் தூணிலும் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. அந்த விபத்துக்குரிய திருத்தச் செலவு ரூபா 3,643,350 ஆக இருந்தபோதிலும், காப்புறுதியினால் வழங்கப்பட்ட பணம் ரூபா 3,472,865 மாத்திரமே என்பதால், மேலும் காணப்பட்ட செலுத்தப்படாத நட்டத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கெப் வண்டியின் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முற்றுப் பெற்றுள்ளதுடன், திருத்தப்பட்ட நிதி பிரமாணம் 104 அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக திருத்தப்பட்ட பரீசோதனை சபையொன்று பெயரிடப்பட்டு அமைச்சின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் எதிர்காலத்தில் திருத்தப்பட்ட நிதி பிரமாணம் 104 அறிக்கையை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.	உரிய முறையில் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4.12 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 07/2018 இன் படி, பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியம் செலுத்தப்படும் ஒவ்வொரு நபருக்காகவும் ஓய்வூதியக் கோப்பொன்று பேணப்பட வேண்டியபோதிலும், அத்தனகல்ல, தொம்பே மற்றும் திவுலப்பிட்டிய பிரதேச செயலகங்களில் ஓய்வூதியம் பெறும் நபர்கள் முறையே 05, 10 மற்றும் 04 பேருக்காகத் தற்காலிகக் கோப்புகள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தபோதிலும், அதற்கான ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி 2025 மே மாதம் வரையிலும் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. மேலும், ஓய்வூதியக் கோப்பு இல்லாத 02 ஓய்வூதியம்பெற்றவர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 704,246 பியகம பிரதேச செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.	அத்தனகல்ல மற்றும் தொம்பே அலுவலகங்களின் தற்காலிகக் கோப்புகள் அனுமதிக்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதுவரை பதில் கிடைக்கப் பெறவில்லை என்றும், திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தின் தற்காலிகக் கோப்புகளை அனுமதிப்பதற்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளதாகவும் மற்றும் கோப்புகள் இல்லாத இருவர் சம்பந்தமாக மேலும் தேவையான தகவல்கள் உரிய நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.	தற்காலிக ஓய்வூதியக் கோப்புகளுக்கு முறையான அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2005 ஆம் ஆண்டில் அல்லது அண்மித்த காலப்பகுதியிலோ மீரிகம மற்றும் திவுலப்பிட்டிய பிரதேச செயலகங்களில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது போலியான ஓய்வூதியங்களைத் தயாரித்தல் மற்றும் போலி ஆவணங்களைத் தயாரிப்பதன் மூலம் ரூபா 5,608,336 அல்லது அண்மித்த பணத்தை மோசடி செய்தமை சம்பந்தமாக 2008 ஆம் வருடத்தினுள் ஒரு உத்தியோகத்தர் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்ததுடன், 2023 ஒக்டோபர் 16 ஆம் திகதி நிபந்தனைகளுக்குட்பட்டு மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். 2023 ஜூன் 02 ஆம் திகதி முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனையொன்றை நடாத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஒழுக்காற்றுப் பரிசோதனையை நடாத்தும் உத்தியோகத்தர்யினால் வழங்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும்	சாட்சி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சின் சட்டப் பிரிவின் தலையீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக 2024/10/16 ஆம் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்ட போதிலும் பதில் கிடைக்காதமையினால் மீண்டும் அது சம்பந்தமாக விசாரித்து 2025/04/28 ஆம் திகதியிடப்பட்ட கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.	குற்றவாளிகளை இனங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	ஆவணங்கள் குற்றத்தை நிரூபிப்பதற்குப் போதுமானதல்ல என்று சுட்டிக்காட்டப்பட்டமையினால் அதற்காகத் தேவையான தகவல்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்தமையினால் நீதிமன்றத்திலிருந்து தகவல்கள் கோரப்பட்டிருந்தன. ஆயினும், 2008 ஆம் வருடத்தினுள் ஏற்பட்ட இந்த மோசடிக்குரிய குற்றவாளிகளை இனங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு 2025 மே மாதம் வரையிலும் முடியாமல் இருந்தது.		
(இ)	மகர பிரதேச செயலகத்தில் 2015 ஆம் வருடத்தில் ஒரு ஓய்வூதியம்பெற்றவர் மரணமடைந்ததன் பின்னர் ஓய்வூதியக் கொடுப்பனவை நிறுத்தாமையின் காரணமாக ரூபா 181,901 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக 2024 ஆகஸ்ட் 20 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தினால் நிதி பிரமாணம் 104 பரிசோதனைக் குழு நியமிக்கப்பட்டிருந்தபோதிலும் 2025 மே மாதம் வரையிலும் அந்தக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நியமிக்கப்பட்ட குழுவினால் உரிய அறிக்கை தயாரித்து வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.	அதன் சிபாரிசுகளுக்கமைய நடவடிக்கை எடுப்பதற்கும் காலதாமதமின்றி அறிக்கையைப் பெற்றுக் கொண்டு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2022 செப்டெம்பர் 08 ஆம் திகதி ஒரு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்யொருவருக்கு வெளியிடப்பட்ட குற்றப்பத்திரத்திற்கமைய அந்த உத்தியோகத்தர்யினால் நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது தகவல்களைப் போலியான விதத்தில் மாற்றுவதன் மூலம் அண்ணளவாக ரூபா 1,360,600 தொகையான அரசாங்கப் பணத்தை மோசடியான விதத்தில் பயன்படுத்தியிருந்தார். இந்த மோசடியின் காரணமாக 2020 ஜூன் 23 ஆம் திகதியிலிருந்து இந்த உத்தியோகத்தர் இடைநிறுத்தம் செய்யப்பட்டு வருவதுடன், முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனை 2022 திசெம்பர் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதிலும், 2025 மே மாதம் வரையிலும் முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனை நிறைவு செய்யப்பட்டு நட்டத்தை இனங்கண்டு, அறவிடுவதற்கான தேவையான	முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனைகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.	முறையான ஒழுக்காற்றுப் விசாரனையை துரிதமாக நிறைவு செய்து நட்டத்தை அறவிடுவதுடன், உரிய தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(உ)	களனி பிரதேச செயலகத்தின் ஓய்வூதியம்பெற்றவர் ஒருவரின் மரணம் 2016 பெப்ரவரி 10 ஆம் திகதி ஏற்பட்டிருந்ததுடன், அன்றிலிருந்து ஓய்வூதியக் கொடுப்பனவு நிறுத்தப்பட வேண்டியபோதிலும், அவ்வாறு நிறுத்தாமையின் காரணமாக 2018 ஜுலை 31 ஆம் திகதி வரையில் ரூபா 787,576 ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக நிதி பிரமாணம் 104 இற்கமைய பரிசோதனையொன்றை நடாத்தி 2024 ஆகஸ்ட் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை முழுமையற்றதாக இருந்தமையினால் மீண்டும் முறையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அந்தக் குழுவிற்கு 2024 திசெம்பர் 03 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்துள்ளபோதிலும், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட அந்தப் பணத்தில் ரூபா 621,576 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.	நிதி பிரமாணம் 104 இன் படி உரிய அறிக்கை ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திடம் தேவையான மேலதிக நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.	முறையான விதத்தில் பரிசோதனைகள் நடாத்தி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தைத் திரும்ப அறவிடுவதுடன், உரிய தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். .

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் வருடத்தின் செயலாற்றல் அறிக்கையின்படி கம்பஹா மாவட்டச் செயலகத்திற்குரியதாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 11 இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்காக அபிவிருத்தி இலக்குகள் 20 சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 11 இலக்குகளுக்குரிய முன்னேற்றம் 50 சதவீதத்திற்குக் குறைந்த நிலையில் காணப்பட்டது.	கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கிறேன்.	இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்குரிய இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. நல்லாளுகை

6.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 ஆகஸ்ட் 07 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 06/2018 உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின்படி ஆண்டினுள் பிரதேச செயலகமொன்றினால் பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டியபோதிலும், 08 பிரதேச செயலகங்களினால் மீளாய்வாண்டுக்காக நடாத்தப்பட்டிருந்தது ஒரு குழுவின் கூட்டம் என்பதுடன், 04 பிரதேச செயலகங்கள் 02 குழுவின் கூட்டங்களையும், ஒரு பிரதேச செயலகம் 03 குழுவின் கூட்டங்களையும் நடாத்தியிருந்ததாக அவதானிக்கப்பட்டது.	சுற்றறிக்கையின்படி காலாண்டுப் பகுதிக்கு ஒரு பிரதேச கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கூட்டம் நடாத்தப்பட வேண்டியபோதிலும், முதற் காலாண்டினுள் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரொருவர் இல்லாமையினாலும், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் தேர்தல் நடவடிக்கைகளின் காரணமாகவும் பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தை நடாத்துவதற்கு முடியாமல் இருந்ததுடன், எதிர்காலத்தில் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் குழுவின் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.	சுற்றறிக்கையின்படி ஒரு வருடத்தினுள் பிரதேச செயலகமொன்றினால் பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டும்.

7. மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய மாவட்டச் செயலகம் மற்றும் அதற்குரிய 13 பிரதேச செயலகங்களுக்காக 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 3414 ஆகவும் உண்மையான பதவியணி 3171 ஆகவும், 16 பதவி தொகுதிகளுக்குரிய வெற்றிடங்கள் 279 ஆகவும் மற்றும் 02 பதவி தொகுதிகளுக்குரிய 36 பேர் மிகையாகவும் காணப்பட்டனர்.	வெற்றிடங்கள் சம்பந்தமாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் பிரதேச செயலகங்கள் மட்டத்தில் காணப்படும் வெற்றிடங்கள் சம்பந்தமாக ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் மேலதிக உத்தியோகத்தர்கள் மத்தியில்	பதவியணி தேவையை ஆய்வு செய்து மிக அத்தியாவசியமான வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கும், மேலதிக பதவியணியை சமநிலைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

		முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் பதவிகளை அனுமதித்துக் கொள்வதற்கு உட்பட்டு உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 64 பேர் உள்ளடக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.	
(ஆ)	2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதியிடப்பட்ட 18/2001 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின்படி ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு அதிகமாகச் சேவை செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டியபோதிலும், கம்பஹா மாவட்டச் செயலகத்தின் மற்றும் 13 பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் 587 பேர் 06 இற்கும் 31 இற்கும் இடையிலும் மற்றும் வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களிலிருந்து இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 126 பேர் 06 இற்கும் 26 இற்கும் இடையிலும் ஒரே அலுவலகத்திலேயே சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.	உரிய பெயர் பட்டியல்கள் ஒருங்கிணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்திடம் மற்றும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுவதுடன் அந்த கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.	சுற்றறிக்கையின்படி ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு அதிகமாகச் சேவை செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படல் வேண்டும்.
(இ)	தாபன விதிக்கோவையின் (ii) ஆம் அத்தியாயத்தின் 13(3) ஆம் பந்தியின் பிரகாரம் பதிற்கடமை நியமனமொன்று நிரந்தர நியமனம் செய்யும் வரையில் தற்காலிகத் தீர்வாக மாத்திரம் செய்யப்படல் வேண்டும் என்பதுடன், பதவிக்கு முழுநேர உத்தியோகத்தர்யொருவரின் சேவை தேவைப்படுமாயின் நிரந்தர நியமனம் காலதாமதமின்றிச் செய்யப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்ட 78 உத்தியோகத்தர்களில், 74 உத்தியோகத்தர்கள் 03 மாதங்களிலிருந்து 06 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதியினுள் பதிற் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.	புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இதுவரை இடம்பெறாதமையினால் அந்தப் பதிற்கடமை நியமனங்களை வழங்க நேர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.